**ஹட்டன்-டிக்ஓயா நகர சபை**
**நுவரெலியா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 மே 21 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூன் 18 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஹட்டன்-டிக்ஓயா நகர சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | காமினிபுர சிறுவர் பூங்கா நவீனமயப்படுத்தல் செயற் திட்டத்திற்கு கிடைக்க வேண்டிய நிர்மாணக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 291,394 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) | மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 22,500 மற்றும் திரண்ட நிதிக்கு செலவு வைக்க வேண்டிய ரூபா 458,356 தொகை மீளச் செலுத்த வேண்டிய வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (iii) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்க கூற்றின் பிரகாரம் வங்கிக்கு நேரடியாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 112,121 ஆன தொகை மற்றும் ரூபா 3,177 ஆன வங்கிக் கட்டணங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (iv) | 33 ஆம் இலக்க நாட்குறிபபின் மூலம் ஆண்டின் கிடைத்த கழிவு ஆண்டின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்குப் பதிலாக களஞ்சிய இருப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (v) | முன்னைய ஆண்டில் பதிவழிக்கப்பட்ட ரூபா 506,575 ஆன வழங்கல் கடன் கொடுத்தோருக்காக மீளாய்வாண்டில் பணத்தை செலுத்தும் போது திரண்ட நிதியத்திற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக 31 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் களஞ்சிய இருப்புக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (vi) | மீளாய்வாண்டில் ஏற்பட்டிருந்த ரூபா 2,202,806 ஆன தொங்கல் கணக்கின் மீதி திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (vii) | உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்தின் மீதிகளை உறுதிப்படுத்தலின் பிரகாரம் கடன் மீதி ரூபா 9,582,260 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |

**(ஆ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 07 ஆண்டுகள் முதல் 29 ஆண்டுகள் காலப் பகுதியை கடந்துள்ள கிடைக்க | பெறவேண்டிய மீதிகளை அறவிடுதற்கு நடவடிக்கை எடுத்தல் | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | வேணஂடிய 04 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 13,135,912 ஆக இருந்தது. | வேண்டும். | |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 ஆண்டுகள் முதல் 08 ஆண்டுகள் வரையான காலப்பகுதி கடந்திருந்த ரூபா 173,448 ஆன செலுத்த வேண்டிய 02 கணக்கு மீதிகள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்யப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |

(இ) **கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 4,588,572 பெறுமதியான 04 கணக்கு விடயங்களுக்குரிய அட்டவணைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப் படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | பெறுமதிகளுடன் கூடிய அட்டவணைகள் மற்றும் மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | ரூபா 242,543 தொகையான 02 வருட வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 40,374,088 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 36,902,395 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபையால் இலங்கை வங்கியின் ஹட்டன் கிளையில் பேணிச்செல்லப்பட்டிருந்த 20688332 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கில் 2019 ஆம் ஆண்டு முழுவதும் ரூபா 43,000,000 இற்கு மேற்பட்ட தொகையான மீதியொன்று காணப்பட்டது. இப்பணத்தை முதலீடு செய்வது தொடர்பில் கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பொருத்தமான முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபையின் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக காணி, கிடைத்தவுடன் கொள்வனவு செய்வதற்காக இப்பணம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. |

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 18,100,000 | 18,225,184 | 16,569,609 | 9,154,702 | 17,250,000 | 18,023,950 | 15,554,625 | 7,499,127 |
| (ii) | வாடகை | 19,945,000 | 12,161,450 | 14,225,088 | 1,877,390 | 18,540,000 | 14,277,670 | 12,034,313 | 6,721,223 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 4,650,000 | 784,505 | 784,505 | - | 18,880,000 | 867,816 | 870,816 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 63,201,500 | 1,229,230 | 1,229,230 | - | 12,955,000 | - | 5,143,499 | - |
| | | 105,896,500 | 32,400,369 | 32,808,432 | 11,032,092 | 67,625,000 | 33,169,436 | 33,603,253 | 14,220,350 |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 7,499,127 தொகையான வீதவரி நிலுவையில் ஆண்டின் போது ரூபா 4,054,088 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 426 கடைகளிலிருந்து 14 ஆண்டுகளுக்கு பின்னர் மதிப்பீடு செய்யப்படாமல் இருந்ததுடன் தற்போது இக்கடை களிலிருந்து ரூபா 100 – 2,800 இற்கு இடைப்பட்ட வாடகை அறவிடப்பட்டு வந்தது. | ஆண்டு 5 இற்கு 5 மதிப்பீடு செய்து வாடகை அறவிடப்பட வேண்டும். | குறித்த கடைகளை புதிதாக மதிப்பீடு செய்வதற்கு உரிய நடவடிக்கை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | வாரத்திற்கு ரூபா 110,000 தொகைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த பேருந்து நிறுத்துமிட பொது மலசலகூடத்திற்காக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 512,015 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) | திக்ஓய பொது வியாபார சந்தையின் 390 A ஆம் இலக்க இறைச்சிக் கடையிலிருந்து திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 156,932 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |

### 2.3.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 1,860,977 தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 11,518,340 ஆன முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்தன. | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |

### 2.3.4 மிகைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபைகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டில் விதிக்கப்பட்ட மிகைக் கட்டணங்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,924 தொகை அறவிடுவதற்கு இருந்தது. | மிகைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆம் பிரிவின் கீழ் 03 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் எந்த விடயத்திற்காகவும் உப விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | நகர சபைகள் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிட்ட பிரகாரம் தேவையான உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை. |

**(ஆ) கைவிடப்பட்ட செயற்திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து மின்சாரம் மற்றும் எரிசக்தி மற்றும் வீடமைப்பு நிர்மாண | உயிரியல் வாயு பிரிவை செயற்படு நிலைக்கு கொண்டு வருவதற்கு | கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்கு பொருத்தமான காணியொன்று |

| | | |
|---|---|---|
| அமைச்சின் நிதிஏற்பாடுகளில் இருந்து ஹட்டன் நகரில் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 1,964,375 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட உயிரியல் வாயு பிரிவு, செயற்படும் நிலையில் காணப்படாமையினால் கைவிடப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | இல்லாமையால் இக்காணியில் உக்காத கழிவுகள் களஞ்சியப் படுத்தப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் கழிவுகளை அகற்றி மீண்டும் உயிரியல் வாயு பிரிவை செயற்படு நிலைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி முன்மொழிவுகளை அமுல்படுத்துதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை நிலைபேறான அபிவிருத்தி முன்மொழிவுகளுக்காக 2018 ஆம் ஆண்டிற்காக அங்கீகரிப்பட்டிருந்த பாதீட்டில் நிதிஏற்பாடு ஒதுக்கப்படா திருந்ததுடன் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான போதியளவான நிகழ்ச்சித் திட்டங்களும் அமுல்படுத்தப் படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு அதன் பிரகாரம் திட்டங்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குக் கையளிக்கப்பட்ட சபைக்குரிய ஹற்றன் விருந்தினர் விடுதிக்காக 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் அறவிட வேண்டிய ரூபா 1,581,710 தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை பணத்தை அறவிடுவதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2005 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த திக்ஓய ஆயுர்வேத மருந்தகத்தின் சிகிச்சை செயற்பாடுகள் நிறுத்தப்பட்டு கிராம சேவையாளர் | தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட | திக்ஓய ஆயுர்வேத மருந்தகத்தினை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| அலுவலகத்தினை நடாத்திச் செல்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. | வேண்டும். | எடுக்கப்படும் |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடமும் மிகையும்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 17 பதவிகளில் உத்தியோகத்தர் வெற்றிடங்கள் 68 ஆக இருந்தன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நூலகர் பதவி 1 ½ ஆண்டுகளாக வெற்றிடமாக காணபப்டுவதுடுளன் நூலக உதவியாளர் III உத்தியோகத்தரொருவரால் கடமை மேவுகை செய்யப்பட்டு வருகின்றது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை. |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபை காணிகளை நீண்ட காலமாக வாடகைக்கு வழங்கும் போது 84 சந்தர்ப்பங்களில் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 36(உ)(II) பிரிவின் பிரகாரம் அமைச்சரின் அங்கீகாரம் பெறப்படவில்லை. | அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சில குத்தகை காணிகளில் உரிய கட்டளை மற்றும் ஏனைய தேவையான ஆவணங்கள் சபையில் காணப்படாமல் இருப்பதுடன் அந்த ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 04 வானங்கள் மற்றும் 10 இயந்திராதிகள் 1 ½ ஆண்டு முதல் 23 வருடங்கள் வரையான காலத்திற்கிடையில் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் திருத்தி பயன்பாட்டிற்கு எடுக்க அல்லது கைதவிர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்தி பயன்பாட்டிற்கு எடுக்க அல்லது கைதவிர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மஹிந்திரா கெப் வண்டியை திருத்தம் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது டன் எஞ்சிய வாகனங்கள் மற்றும் உபகரணங்களை எதிர் காலத்தில் அகற்றுவதற்கு 2019 நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான M.A.S. அபுசாலி மண்டபம் மற்றும் அதில் காணப்படுகின்ற உபகரணங்கள் ஆண்டு முழுவதும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | மண்டபத்தையும் உபகரணங்களையும் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (இ) | திக்ஓய நகரின் நூலகத்தின் பயன்பாட்டு பதிவேட்டின் பிரகாரம் 3000 புத்தகங்கள் காணப்பட்ட போதும் ஒரு புத்தகமேனும் எடுத்துச் செல்லப்பட்டிருக்கவில்லை. | வாசிப்பாளர்களை பதிவசெய்தல் மற்றம் புத்தக இரவல் கொடுப்பதை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | ‘‘ஈ நெண பியச’’ நிலையத்தின் செயற்பாடுகள் நிறுத்தி வைக்கப்பட்டமையால் காணப்பட்ட உபகரணங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் பயனற்றுக் காணப்பட்டது. | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பயிற்சி ஆசிரியர் இல்லாமையால் இந்த இப்பிரிவு செயலற்றிருந்தது. புதிதாக வளவாளரொருவர் முன் வந்துள்ளதுடன் எதிர்காலத்தில் பயிற்சி நிலையத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |

### 3.5.2 வருடாந்த பொருள் மெய்மையாய்வு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் களஞ்சியத்தில் பாவனைக்கு பொருந்தாத பொருட்கள் அதிகளவில் அழிப்பதற்கும் ஏலவிற்பனை செய்யக்கூடிய பொருடகள் ஏலத்தில் விற்பனை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பற்றாக்குறை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் 38 வகைகளுக்குரிய 206 பொருட்கள் பற்றாக்கறை இனங்காணப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும்எடுக்கப்பட்டிருக்க வில்லை | பற்றாக்குறை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை |
| (இ) | 2018 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டிருந்த வெவ்வேறு வகையான உபகரணங்கள ‘ 09 உருப்படிகளுக்குரிய 439 அலகுகள் பற்றாக்கறை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | பற்றாக்குறை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை |

### 3.5.3 வாகனப் பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான 14 வானங்களுக்குரிய 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான நாளாந்த ஓட்ட அட்வணை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. இந்த 14 வாகனங்களுக்காக 2019 ஆம் ஆண்டின் போது எரிபொருள் செலவினமாக ரூபா 4,407,443 | நாளாந்த ஓட்ட அட்டவணை விரைவாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நாளாந்த ஓட்ட அட்டவணை விரைவாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | தொகை மற்றும் பழுதுபார்த்தலுக்காக ரூபா 885,614 தொகைகள் செலவிடப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | நகர சபைக்குரிய 06 வாகனங்களின் மணித்தியால மீற்றர் செயலற்றுக் காணப்பட்டதுடன் அவற்றை நாளதுவரையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மைலோ மீற்றரை உரிய நிலைமைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |